# குழந்தைப் பாதுகாப்பு வழிகாட்டுதல்

## I. முன்னுரை:

1948 - ஆம் ஆண்டு ஐ.நா. அவையில் இயற்றப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் அனைத்து குழந்தைகளும் சமமான மற்றும் சிறப்புக் கவனமும் பாதுகாப்பும் உடையவர்கள் என அறிவிக்கிறது. 1990-இல் வெளியிடப்பட்ட ஐ.நா.வின் குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கை, குழந்தைகளின் பாதுகாப்பு, வளர்ச்சி, பங்கேற்பு மீதான நாடுகளின் பொறுப்புகளை கோடிட்டுக் காட்டுகிறது. அனைத்து தனிநபர்களின் உள்ளார்ந்த மாண்பு மற்றும் உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு நாட்டின் குழந்தைகளின் வாழ்க்கைச் சூழல்களை மேம்படுத்துவதற்கு அனைத்து உலக நாடுகளின் ஒத்துழைப்பையும் இந்த உடன்படிக்கை கோருகிறது. நலிவுற்ற குழந்தைகள் மீதான அக்கறையை அது வெளிப்படுத்துகிறது.

திருநெல்வேலியை மையமாக வைத்து இயங்கும் வான்முகில் அமைப்பு குழந்தைகள் உரிமைகள் குறித்த உடன்படிக்கையில் இடம்பெறும் அம்சங்களை நிலை நிறுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் கூடிய அறப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்கிறது. குழந்தைகள் பாதுகாப்பை தனது கடமையாக எடுத்துக் கொண்டு சீரிய முறையில் அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது. எளிதில் பாதிக்கப்படக் கூடிய குழந்தைகளை ஆபத்திலிருந்து விடுவிக்கவும், அவர்களுக்கு நேரும் பாதிப்பை குறைக்கும் செயல்பாடுகளை வான்முகில் அமைப்பு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

குழந்தை உரிமைகள், அதிலும் குறிப்பாக நலிவுற்ற பெண் குழந்தைகளின் வளர்ச்சி, மேம்பாடு, பங்கேற்பு, பாதுகாப்பு போன்ற விடயங்களில் வான்முகில் அமைப்பு சிறப்புக் கவனம் செலுத்தி, தனது பணிக் கிராமங்களில் இதுகுறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு குறித்த அம்சங்களில் ஆக்கப்பூர்வ தலையீடுகளைச் செய்து வருகிறது. எனவே இதற்கான சூழலை உருவாக்கும் நோக்கில், வான்முகில் அமைப்பு தனது பணியாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் இது தொடர்பான வழிகாட்டுதல்களையும் தேவையான கருத்துக்களையும் வழங்கி வருகிறது.

## II. வரையறைகள்

அ. குழந்தை: ஐ.நா. உடன்படிக்கை வரையறுத்துள்ளது போல 18 வயதுக்குட்பட்ட எந்த ஒரு தனிநபரும் குழந்தை எனப்படுவர்.

ஆ. பணியாளர்: வான்முகில் அமைப்பால் பகுதி நேரமாக அல்லது முழு நேரமாக பணிக்கு அமர்த்தப்படும் தனிநபர்கள் பணியாளர் என்று கருதப்படுவர்.

இ. ஆலோசகர்கள், தன்னார்வலர்கள், குழு உறுப்பினர்கள், ஆய்வாளர்கள், பயிற்சியாளர்கள்,

வருகையாளர்கள் அல்லது தனிப்பட்ட நபர்கள், குழந்தைகளிடம் பணியாற்றுபவர்கள், குழந்தைகளுக்காக கடமை ஆற்றுபவர்கள், உள்ளூர் குழந்தைகள் மத்தியில் பணியாற்றுபவர்கள் போன்ற அனைவரும் உடன் உழைப்போர் அல்லது இணைந்து பணியாற்றுவோர் ஆவர்.

**குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல்:**

உடல்ரீதியாக பாலியல் மற்றும் உணர்வுரீதியாக குழந்தைகளை துன்புறுத்தல்கள் இதில் அடங்கும். குழந்தைகளை புறக்கணித்தல், இழுத்தடித்தல், குழந்தைத் தொழிலாளர், கடத்தல், குடும்ப வன்முறை மற்றும் சுரண்டல் (தொழில் ரீதியாக, பாலியல் ரீதியான சுரண்டல் உட்பட) மேலும் குழந்தை உரிமைகள் உடன்படிக்கை விதிமுறைகளை மீறும் எந்த செயல்களும் அடங்கும்.

தவறாகப் பயன்படுத்துதல் காரணமாக பாதிப்படைந்தவர்கள் ஆண் குழந்தையாகவே, பெண் குழந்தையாகவோ அல்லது மாற்றுப் பாலினராகவோ இருக்கலாம் அல்லது தங்களைத் தாங்களே வருத்திக் கொள்ளும் பெரியோர் அல்லது குழந்தைகள்.

**குழந்தைப் பாதுகாப்பு:**

குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துதல், புறக்கணித்தல், துன்புறுத்தல், கொத்தடிமை அல்லது கட்டாயத் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் பாகுபாட்டினை குறைக்கும் அல்லது தடுக்கும் வகையில் பயன்படுத்தப்படும் செயல்பாடுகள் போன்றவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் என்று பொருள் கொள்ளப்படும்.

## III. குறிக்கோள் - அடித்தளம் - திசைவழி

அ) குழந்தை உரிமைகளுக்கான ஐ.நா. உடன்படிக்கைதான் குழந்தை பாதுகாப்புக்கான அடித்தளம்.

ஆ) அனைத்து குழந்தைகளையும் ஆபத்தில் இருந்து தடுக்கவும், இடர்களை குறைக்கவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உறுதி செய்வது வான்முகில் அமைப்பின் பொறுப்பு. பாதுகாப்பதுடன் அனைத்து குழந்தைகளின் நலனுக்காக ஆழ்ந்த அக்கறையோடு குழந்தை உரிமைப் பணிகளை செய்ய வேண்டியதும் எமது பொறுப்பு.

இ) வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் அல்லது நம்பிக்கை அடிப்படையில் குழந்தைகளது பெற்றோர், சட்டபூர்வ பாதுகாவலர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து அனைத்து குழந்தைகளும் ஆபத்து மற்றும் எந்த விதமான பாகுபாடு அல்லது தண்டனை இவற்றில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

ஈ) குழந்தை உரிமைகள் உடன்படிக்கையில் தடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படும் அனைத்து பாகுபடுத்துதல்கள், துன்புறுத்துதல்கள், தவறாகப் பயன்படுத்துதல்கள் தடுக்கப்பட வேண்டியவை.

உ) அனைத்து நிகழ்வுகள், சேவைகள் மற்றும் செயல்பாடுகள் குழந்தைகளின் முழு நலன்களுக்கு ஏற்றவாறு நடத்துவதை முதன்மையான கருத்தாகக் கொள்ள வேண்டும்.

ஊ) குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் குறித்த அறிக்கைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் தரும் முடிவுகள் அனைத்துமே குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டே எடுக்கப்பட வேண்டும்.

எ) குழந்தைகள் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களது கருத்துக்கள், பார்வைகளை அவர்களது நலன் சார்ந்த விஷயங்களின் அடிப்படையில் முன் வைக்க வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## IV. வழிகாட்டும் நெறிமுறைகள்:

அ. வான்முகில் அமைப்பின் பணியாளர்கள், இணைந்து பணியாற்றுவோர், நேரடியாக குழந்தைகளுடன் பணி செய்பவர்கள் வான்முகில் அமைப்பின் குழந்தை பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

ஆ. குழந்தைப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் தொடர்ந்து திருத்தம் செய்யப்படுவதுடன் தேவையான பயிற்சிகள் தகுந்த இடைவெளிகளில் அளிக்கப்படும். குழந்தைப் பாதுகாப்பு வழிகாட்டுதல் திருத்தங்களை வான்முகில் அமைப்பு முன்னெடுக்கும்.

இ. குழந்தைகளுடன் நேரடியாக வேலை செய்யும் பொழுது குழந்தைகளை வைத்து எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள், புகைப்படம் குறித்த வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கியதாகும்.

ஈ. இந்த கொள்கை வரைவுத் திட்டத்தின் நோக்கத்தை தங்களது குழந்தைகள் பாதுகாப்புச்செயல்பாட்டில் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் குழந்தை உரிமைகள் உடன்படிக்கையால் கோடிட்டுக் காட்டியுள்ள விதிகள், நிலையான செயல்பாடு வழிகாட்டுதல் வான்முகில் திட்டத்திற்கு பொருந்துவதாக அமையும். அவைகள் பின்வருமாறு நிரல்படுத்தப்படுகின்றன.

| **வான்முகில் பணியாளர்கள், இணைந்து பணியாற்றுவோர் செய்ய வேண்டியவை** | **வான்முகில் பணியாளர்கள், இணைந்து பணியாற்றுவோர் செய்யக் கூடாதவை** |
|---|---|
| ❖ குழந்தைகள் மற்றும் இளைஞர்களை மரியாதையாக நடத்தப்பட வேண்டும். இன, நிற, பால், பாலியல், அடையாளம், மொழி, மாற்றுத் திறனாளிகள், மதம், | ❖ பாகுபடுத்தப்பட்ட, இரண்டு அர்த்தம் தரும் ஒழுங்கற்ற மொழியைப் பேசும் பொழுது பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும். |

அரசியல், தேசியம், இனம் அல்லது சமூக அடையாளம், பிறப்பு அல்லது மற்ற தகுதிகள் இவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாது.

- ❖ பாதுகாப்பான சூழலை அனைத்து குழந்தைகள் இளைஞர்கள், பெற்றோர், பணியாளர்கள் தன்னார்வலர்களுக்கு அளிக்க வேண்டும்.
- ❖ குழந்தைகள், இளைஞர்கள், பெற்றோர், பணியாளர்கள் மற்றும் தன்னார்வலகளை பாதித்த பிரச்சனைகள் குறித்து பேசுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ குழந்தைகள் மீதான உடல் ரீதியான தண்டனையை தடுக்க வேண்டும்
- ❖ குழந்தைகள் தவறாக பயன்படுத்தப்படுவது போன்ற தவறுகள் நேரிடுவது தெரிந்தால் உடனடியாக அமைப்பிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- ❖ குழந்தைகளுடன் பணி செய்யும் பொழுது அல்லது குழந்தைகளின் அருகாமையில் இருக்கும் பொழுது கூடவே ஒரு பெரியவர் முடிந்தளவு உடன் இருக்க வேண்டும்.
- ❖ கண்காணிப்பாளர்கள் / மேலாளர் பணியாற்றும் சூழலில் அவர்களது செயல் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு அமைப்பிற்கு இழிவை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்தால் அதனை உடனே விசாரிக்க வேண்டும்.
- ❖ வெட்கப்படுத்தக் கூடிய அவமானப்படுத்தும் சிறுமைப்படுத்தும் தகுதியை குறிக்கும் வகையில் குழந்தையை பேசுதல் அல்லது உணர்ச்சி வசப்பட்டு குழந்தை தவறாகப் பேசுதல் தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ பாலியல் தூண்டுதல் தரும் பேச்சு, குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல், எவ்விதமான பாலியல் செய்கை, பாலியல் தொழில் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ ஒரு குழந்தையை முறையற்ற, தேவையில்லாமல் அல்லது நமது பண்பாடு அனுமதிக்காத வழியில் ஒரு குழந்தையை பிடித்தல், முத்தமிடல், அரவணத்தல் அல்லது தொடுதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ உளவியல் ரீதியாக ஒரு குழந்தையைத் துன்புறுத்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ குறிப்பிட்ட குழந்தைக்கு பாகுபாடு காட்டுவதோ அல்லது முன்னுரிமை கொடுப்பதோ கூடாது
- ❖ குழந்தைகள் பணி செய்து கொண்டிருக்கும் அறையில் தூங்குவதோ, படுக்கை போடுவதோ கூடாது
- ❖ பாலியல் தொடர்பான தவறான படங்களை உருவாக்குவதோ குழந்தைகளுக்கு தருவிப்பதோ கூடாது
- ❖ குழந்தையை சுரண்டல் அல்லது தொந்தரவு செய்யும் நோக்கில், கணினி, மொபைல் போன், வீடியோ, கேமரா மற்ற எந்தவித தொழில்நுட்பங்களும் பயன்படுத்தக் கூடாது.

| குழந்தைகளை புகைப்படம் எடுத்தல் அல்லது அவர்களது புகைப்படத்தைப் பயன்படுத்துதல் | |
|---|---|
| ❖ குழந்தைகளின் தனிப்பட்ட புகைப்படங்களை பயன்படுத்தும் பொழுது உள்ளூர் வழக்கங்களையும் சூழலையும் புரிந்து கொள்ள வேண்டும்.<br><br>❖ திட்ட செயல்பாடுகளை அறிமுகம் செய்து புகைப்படம், வீடியோ எடுக்கும் நோக்கத்தை எடுத்துக் கூறி அக்குழந்தைகளிடம் வேண்டுகோள் விடுத்து புகைப்படம் வீடியோ எடுக்க வேண்டும்.<br><br>❖ குழந்தை, குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலரிடம் புகைப்படத்தை எவ்வாறு பயன்படுத்துவோம் என்பதை எடுத்துக் கூறி எழுத்து மூலம் ஒப்புதல் பெறப்பட படிவத்தை பயன்படுத்த வேண்டும்.<br><br>❖ புகைப்படம் மற்றும் வீடியோ பதிவுகளில் குழந்தைகள் மாண்புடன் சரியான மதிப்பான தோற்றத்தல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.<br><br>❖ முக்கிய மாற்றங்கள் அல்லது கூடுதலாக குழந்தைகளின் புகைப்படங்களை மற்றும் வீடியோ பதிவுகளைப் பயன்படுத்த அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். | ❖ குழந்தைகளின் அனுமதி இல்லாமல் அவர்களது தனிப்பட்ட புகைப்படம் எடுப்பதோ அல்லது வீடியோ எடுப்பதோ கூடாது<br><br>❖ குழந்தைகளின் புகைப்படத்தை பயன்படுத்தும் ˙பொழுது அவர்கள் புகைப்படத்தின் சூழலை சரியாக காட்டாமல் இருக்கக் கூடாது<br><br>❖ குழந்தைகள் புகைப்படங்களை விளம்பரத்திற்காக பரிமாறும் போது குழந்தைகள் பெயர், இடம், தொடர்பு முகவரியும் பயன்படுத்தப்பட கூடாது<br><br>❖ குழந்தைகளை அவர்களது மாண்பு குறையும் விதத்திலோ, மரியாதைக்கு குறைவு ஏற்படும் வகையிவோ சித்தரிக்கக் கூடாது<br><br>❖ குழந்தைகளின் முழுமையான அடையாளங்கள், தொடர்புத் தகவல்கள், இருப்பிடம் ஆகியவை வெளிப்படையாக விளம்பரப்படுத்தக் கூடாது. |

## V. அறிக்கையிடும் செயல்முறை

**வான்முகில் பணியாளர்கள் மற்றும் இணைந்து பணியாற்றுபவர்கள் குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படலைத் தடுக்க மேற்கொள்ளும் நடைமுறைகள்**

வான்முகில் பணியாளர்களில் யாராவது ஒருவர் குழந்தை தவறாகப் பயன்படுத்துவதாக தகுந்த ஆதாரங்களுடன் தெரியவந்தாலோ அல்லது இணைந்து பணியாற்றுவோர் மூலம் குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக தெரியவந்தாலோ உடனடியாக அதுகுறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு அறிக்கையினை களப்பணியாளர்களிடமோ அல்லது திட்ட மேலாளரிடமோ சமர்ப்பிக்க வேண்டும். அறிக்கையை பெற்றுக் கொண்ட அப்பணியாளரே பொறுப்பெடுத்து, குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படும் விடயம் குறித்து இயக்குனரிடம் அறிக்கை அளித்து கலந்து ஆலோசிப்பார்.

வான்முகில் அமைப்போடு இணைந்து பணியாற்றும் பணியாளர்கள் குழந்தைகள் தவறாகப் பயன்படுத்துவது குறித்து தகுந்த ஆதாரங்களுடன் தெரிய வருமாயின் உடனடியாக அது தொடர்பாக விசாரித்து அறிக்கையை தயார் செய்து வான்முகில் திட்ட மேலாளரிடம் அளிக்க வேண்டும். தகவல் பெற்றவர் உடனடியாக அறிக்கையை இயக்குனரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து அவர்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கலாம், அல்லது பணியாளர்களிடம் இருந்து கிடைத்த விவரங்களை தங்களது கவனத்தில் வைத்திருந்து இன்னும் கூடுதல் தகவல்களுக்காக காத்திருக்கலாம். ஏனெனில் முழுமை பெறாத தகவல்கள் ஒரு குழந்தையை பெரிய ஆபத்தில் கூட சிக்க வைத்துவிடலாம்.

குழந்தைகள் தவறாகப் பயன்பட்டது குறித்து அவர்கள் தங்களது தனிப்பட்ட காரணங்களுக்காக அறிக்கையை வேண்டுமென்றே அளிக்காமல் இருந்தால் அல்லது தாமதப்படுத்தினால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை அல்லது பணி நீக்கம் செய்யப்பட வேண்டும். எவ்வாறு ஆயினும் மேற்சொன்ன அறிக்கையில் மறைந்துகிடக்கும் கடினமான உண்மைகளை வெளிக்கொணருவதால் ஏற்படும் நேர்மையான இழப்புகளுக்கு அந்தத் தனிநபரோ வான்முகில் அமைப்போ தான் பொறுப்பேற்க வேண்டும்.

## VI. ஒழுங்கு நடவடிக்கைகள்

வான்முகில் பணியாளர்கள் குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துவது தெரிய வந்தால் முறையான விசாரணை நடைபெறும். இது குறித்து குழந்தை பாதுகாப்புக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் வான்முகில் தலைமை முடிவு செய்யும். குழுவின் அறிக்கையைப் பெற்று பின்னர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட பணியாளரிடம் நடந்த சம்பவம் குறித்த விளக்கம் கேட்கப்படும். விசாரணையில் அது உறுதியாக்கப்பட்டால்

சம்பந்தப்பட்ட பணியாளர் பணி நீக்கம் செய்யபடுவர். அவரது பணி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்; மற்ற நடவடிக்கைகள் மூலம் அமைப்புடன் உள்ள பிற ஒப்பந்தங்களும் முறிக்கப்படும்.

**VII. வான்முகில் குழந்தைப் பாதுகாப்புக் குழு**

இக்குழுவில் ஏழு பேர் உண்டு. கிராம வழிநடத்துனர்கள் நால்வர் (ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இருவர்), களப்பணியாளர்கள் இருவர் மற்றும் திட்ட மேலாளர்.

**VIII. வழிகாட்டும் மேலாண்மை**

வான்முகில் குழந்தைப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் திருத்தம் செய்யப்பட்டு மேம்படுத்தப்படும். இதன் மூலம் பொருத்தமான சிறந்த செயல்பாடுகளை தழுவி கோடிட்டுக்காட்டப்பட்டு அதற்கான வழிகளை பின்பற்றப்பட முடியும்.

வழிகாட்டுதல்களை மேம்படுத்த பங்கேற்பு அணுகு முறையை பயன்படுத்த வேண்டியது வான்முகில் குழந்தை பாதுகாப்புக் குழுவின் பொறுப்பாகும். அத்துடன் முக்கியப் பங்குதாரர்களுக்கு தொடர்புடைய பயிற்சிகளை அளித்தல் மற்றும் திருத்தங்களை பணியாளர்கள், இணைந்து பணியாற்றுவோர் மற்றும் சமூக உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்குதல் அக்குழுவின் பொறுப்பாகும்.

**IX. பணியாளரின் ஒப்புதல்**

நான், வான்முகில் குழந்தை பாதுகாப்பு வழிகாட்டுதல் பிரதியைப் பெற்று, அதன் சாராம்சங்களை வாசித்து புரிந்து கொண்டேன். ஐ.நா.வின் குழந்தை உரிமைகள் உடன்படிக்கையையும், குழந்தை பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தும் ஆபத்துக்களை குறைக்க வான்முகில் அமைப்பு மேற்கொள்ளும் பணிகளையும் புரிந்து கொண்டேன். அர்ப்பணிப்புடன் இப்பணிகளை நிலைநிறுத்தும் வழிவகைகளைப் புரிந்து கொண்டேன்.

இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அவசியமானது என்றும் தவறும் பட்சத்தில் வான்முகில் அமைப்பின் தற்சமயம் உள்ள ஒப்பந்தத்தை மீறிய செயலாக கருதப்படும் என்றும் உணர்ந்து கொண்டேன்.

கையொப்பம் :

பெயர் :

பதவி :

தேதி :